## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுக் கலைமாணித் தேர்வு (2012/2013)

### ED/S 3213 கற்பித்தல் முறைகளும் நுட்பங்களும் (Teaching Methods & Techniques)

---

ரம் - 03 மணித்தியாலங்கள்

ுதி I இல் இருந்து இரு (02) வினாக்களுக்கும் பகுதி II இல் இருந்து மூன்று (03) னாக்களுக்கும் மொத்தமாக ஐந்து (05) வினாக்களுக்கு விடை தருக.

---

## பகுதி I

1. அ. கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் தொடர்பாடல் நிகழ்ச்சி செயன்முறையைச் சிறப்பாக மேற்கொள்ளக் கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக. (07 புள்ளிகள்)

   ஆ. 'வகுப்பறைச் செயற்பாட்டின் போது எதிர்பார்க்கப்படும் நடத்தை மாற்றத்தை மாணவர்களிடத்தில் ஏற்படுத்த அவர்களின் புலக்காட்சித்திறன் முக்கியமானதொன்றாகும்.' புலக்காட்சித்திறன் விருத்தியில் செல்வாக்குச் செலுத்தும் அகவய, புறவயக் காரணிகள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

   (07 புள்ளிகள்)

2. அ. "வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் ஆசிரியர்களின் ஒரு பாடவிடயத்தினூடாக எதிர்பார்க்கும் <u>கற்பித்தலின் நோக்கம்</u>, அடைய உத்தேசிக்கும் <u>கற்பித்தல் மாதிரி</u>, கையாள வேண்டிய <u>கற்பித்தல் முறை</u> ஆகியன வினைத்திறனுள்ள கற்பித்தலின் அடிப்படைக் கூறுகளாகும்." கனிஷ்ட இடைநிலை வகுப்பறைக் கற்றல் - கற்பித்தலை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக.

   (08 புள்ளிகள்)

   ஆ. அறிவுசார் உளவியல் கோட்பாடுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட கற்பித்தல் மாதிரியின் செயற்பாட்டினைச் சுருக்கமாக விளக்கி, இதன் கல்வி நோக்கங்கள் நான்கினைச் சுருக்கமாக விளக்குக.

   (06 புள்ளிகள்)

3. அ. மூவழித் தொடர்பாடல் நிகழ்ச்சித் திட்டம் வினைத்திறனுள்ள வகுப்பறைச் செயற்பாட்டின் முக்கிய அம்சமாகும். இதன் மூலம் ஆசிரியர் எதிபார்க்கும் நடத்தை மாற்றத்தினைச் சுருக்கமாக விளக்குக. (04 புள்ளிகள்)

ஆ. ஆரம்ப, இடைநிலைப் பாடசாலைகளில் குழுமுறைக் கற்பித்தல் வினைத்திறனுள்ளதாக அமைகின்றது. இதன் ஒழுங்கமைப்பு, செயற்பாடு என்பன பற்றி விளக்கி, இக்கற்பித்தலின் நன்மைகள் ஐந்தினைச் சுருக்கமாக விளக்குக.

(04 புள்ளிகள்)

இ. இடைநிலைப் பிரிவு மாணவர்களின் கற்பித்தலில் கலந்துரையாடல் முறை சிறந்த பயனுடையதாக அறியப்பட்டுள்ளது. இதன் சிறப்பம்சங்கள் எட்டினைச் (8) சுருக்கமாக விளக்குக.

(06 புள்ளிகள்)

## பகுதி II

4. அ. வகுப்பறைக் கற்பித்தல் செயற்பாட்டில் வினாக்களின் பயன்பாடுகள் ஐந்தினைக் கூறி அவற்றை சுருக்கமக விளக்குக.

(04 புள்ளிகள்)

ஆ. வினாக்களைக் கேட்பதனூடாக ஆசிரியர் கற்பித்தலை மேற்கொள்ளும் போது வினாக்கேட்டலில் கடைப்பிடிக்க வேண்டிய குறிப்பிடத்தக்க அம்சங்கள் பத்தினை (10) எடுத்துக் கூறிச் சுருக்கமாக விளக்குக. (10x1=10 புள்ளிகள்)

இ. மாணவர்கள் கேட்கும் வினாக்களுக்கு, விடைதருவதில் ஆசிரியரின் நடத்தையும், உளப்பாங்கும் பொறுப்பாக உள்ளன. இதனடிப்படையில் ஆசிரியர் வெளிப்படுத்தும் சிறப்பான நடத்தைகள் ஐந்தினை (5) விளக்குக. (5x2=10 புள்ளிகள்)

5. அ. ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதில் சிந்தனையின் மிக உயர்ந்த கட்டமாக ஆய்வுச் சிந்தனை கருதப்படுகின்றது. இதன்படி ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதற்கான கட்டங்களைப் பட்டியற்படுத்துக. (12 புள்ளிகள்)

ஆ. சிறந்த ஒரு ஒப்படைக்குரிய பண்புகளை எடுத்துக்கூறி கல்விச் செயற்பாட்டில் ஒப்படைகளின் முக்கியத்துவத்தினை விளக்குக.

(12 புள்ளிகள்)

6. அ. செயற்றிட்டமுறைக் கந்பித்தலில் முக்கியமான முக்கிய நான்கு படிகளையும் சுருக்கமாக, உதாரணத்துடன் விளக்குக. (08 புள்ளிகள்)

ஆ. சிறப்பான பாடத்திட்டமிடல் மூலம் ஆசிரியர் தமது குறிக்கோளை அடைய முடியும். இதன்படி பாடத்தைத் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் எட்டினைக் (08) கூறி உமது கருத்துக்களை முன்வைக்குக. (8x2= 16 புள்ளிகள்)

7. அ. முன்திட்டமுறைக் கற்பித்தல் என்றால் என்ன? இதன் மூலம் நேர்த்திட்டமொன்றில் அடங்கியிருக்க வேண்டிய பண்புகள் நான்கினைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ஆ. கலைத்திட்டச் செயற்பாடானது பாடசாலையின் இலக்குளை அடையக்கூடியவாறு அமைதல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் அடிப்படையில் கலைத்திட்டம், பாடத்திட்டம், வேலைத்திட்டம், பாடக்குறிப்பு இவற்றுக்கிடையிலான தொடர்புகளை எடுத்துக்காட்டுக?

(08 புள்ளிகள்)

இ. வகுப்பறைமட்டத் தொடர்பாடல் செயன்முறையைச் சிறப்பாக மேற்கொள்ளக் கருத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களைச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)